நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர், 25 கோடி ரூபாய் தேவையென்று அறிக்கை கொடுத்திருக்கிறார். அதுவும் போதாது என்று அவரிடம் நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்; எங்களுடைய அல்லாபுரம் பேரூராட்சியில் தண்ணீர் கொடுத்து 23 நாட்களாகிறது. அதேபோல காட்பாடி, அணைக்கட்டு தொகுதிகளில் எல்லாம் மக்கள் தண்ணீர் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்—கொடுத்து இருக்கிற 2 கோடி ரூபாய்க்கு நன்றி, நன்றி. ஆனால், இன்னும் 48 கோடி ரூபாயை ஒரு வார காலத்திற்குள் தாங்கள் கொடுத்து எங்கள் மாவட்டத்தினுடைய தாகத்தை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தீர்ப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

(ஊ) மானியக் கோரிக்கை விவாதத்தில் கட்சிகளுக்குப் போதிய நேரம் ஒதுக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், நீங்கள் கொடுத்திருப்பதைத்தான் நான் எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு) அது இல்லையென்றால், இன்னும் எத்தனைதான் வைத்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை. எங்களுடைய நேரத்தைப் பற்றிய கருத்தை நான் இங்கே பதிவு செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக உணர்கிறேன். Zero Hour-ல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பேரவைத் தலைவருக்குத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர்களுடைய கவனத்திற்குத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பிறகு என் அறைக்கு வாருங்கள். நேரம் ஒதுக்குவது பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

திரு. வை. சிவபுண்ணியம்: இல்லை, இல்லை. நான் பிரச்சினைக்குள் போகவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன பிரச்சினை என்றால், தற்போது மணி 11-10 ஆகப் போகிறது. பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, ஒரு கவன ஈர்ப்பு

2010 ஏப்ரல் 15] [திரு. வை. சிவபுண்ணியம்]

எடுப்பதற்கு முன்பாகவே முக்கால் மணி நேரம் பேச அனுமதிக்கிறீர்கள். பின்னர் எங்களுடைய நேரம் எடுக்கப்படுகிறது. இதுபற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஏ) வேடசந்தூர் வட்டம், வடமதுரை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செந்தில்குமார் மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, வடமதுரை காவல் நிலையத்தில் 5-4-2010 அன்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செந்தில்குமார் மர்மமான முறையில் இறந்துள்ளதால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. ஞா. ஜாண் ஜோசப், திரு. வே. மாரிமுத்து, திருமதி ரா. லீமா றோஸ், திரு. ப. டில்லி பாபு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. உலகநாதன் ஆகியோர் விதிகள் 56, 55 ஆகியவற்றின்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்களே அவரை encourage செய்கிறீர்களா?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: எங்கள் கட்சியின் சார்பாகத்தான் அவர் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைத்தான் நான் கூப்பிட்டிருக்கிறேன். திரும்பவும் ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-2010 ஆம் நாளன்று, திண்டுக்கல் மாவட்டம்,